# 'தண்ணீர்' வியாபாரம்!

# சிக்கித் தவிக்கும் விவசாயிகள்!


பிரகாஷ்

உறிஞ்சக் கூடாது' என்று போராட்டங்கள் நடத்தி முடித்துவிட்டோம். ஆனால் யாரும் இன்றுவரை கண்டு கொள்ளாமல் தொடர்ந்து தண்ணீரை உறிஞ்சிக் கொண்டுதான் இருக்கின்றனர். இந்தத் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மோகனும் 'நிலத்தடி நீரை கம்பெனிகள் உறிஞ்சக் கூடாது' என்று போராடினார். ஆனால் இப்போது அவரே தண்ணீர் லாரி மூலம் கிணற்று நீர் வியாபாரத்தில் ஜோராக இறங்கிவிட்டார். என்ன நடந்தாலும் சரி! இதை ஒரு மக்கள் போராட்டமாக மாற்றி நிலத்தடி நீர் உறிஞ்சுவதைத் தடை செய்ய விரைவில் ஒரு மாபெரும் போராட்டம் வெடிப்பது உறுதி" என்றார் ஆவேசமாக.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விவசாயிகள் சங்க செயலாளர் வன்னியராஜ் நம்மிடம் பேசினார். அவர், "இப்பிரச்சினையை பத்து வருடங்களுக்கும் மேலாக யாரும் கண்டுகொள்ளாமல் விட்டதால் இப்போது விவசாயம் படுத்துவிட்டது. விவசாயிகளையே தண்ணீர் வியாபாரிகளாக்கி விட்டனர் தண்ணீர் லாரி ஓனர்கள். இது குறித்து சி.பி.ஐ. சார்பில் பத்துக்கும் மேற்பட்ட போராட்டங்களை இதுவரை நடத்தியாகி விட்டது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாளில்கூட எங்களது மாநில துணைத் தலைவர் ராஜேந்திரன், 'தண்ணீர் உறிஞ்ச நிரந்தரத் தடை போட வேண்டும்' என்று கலெக்டரிடம் வலியுறுத்தினார். ஆனாலும் தண்ணீர் திருட்டு தொடர்கிறது. இதை எதிர்த்து அடுத்த வாரமே போராட்டம் நடத்த முடிவு செய்திருக்கிறோம்" என்றார்.

தமிழ்நாடு சுற்றுச் சூழல் கழக தூத்துக்குடி மாவட்ட அமைப்பாளர் பிரபாகரன் நம்மிடம், "தண்ணீருக்கான முன்னுரிமை என்பது முதலில் குடிநீருக்கும், அடுத்து விவசாயத்துக்கும், கால்நடைகளுக்கும் கொடுக்க வேண்டும். இறுதியாகத்தான் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஒட்டப்பிடாரத்தில் இந்த விதி அடியோடு மீறப்படுகிறது. இதனால் விவசாயம் மட்டும் அழியவில்லை. மக்கள் குடிநீருக்கும் அல்லல்பட்டு வருகின்றனர். மாவட்ட நிர்வாகம்தான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர்களும் வேடிக்கை பார்ப்பது விந்தையாக இருக்கிறது" என்றார் வேதனையோடு.






ஒட்டப்பிடாரம் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மோகனிடம் பேசினோம். அவர், "குடிநீர் தவிர பிற காரியங்களுக்காக நீர் உறுஞ்சுதல் தடை செய்யப்பட வேண்டும் என்று அ.தி.மு.க. போராட்டம் நடத்தியது. அதன் விளைவாக ஓரளவு நீர் வியாபாரம் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. நான் லாரி வைத்து தண்ணீர் வியாபாரம் செய்வதாகக் கூறுவது தவறு. காரணம் எனக்குக் குடிநீர் லாரியே கிடையாது" என்று மறுத்தார்.

இறுதியாக தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் பிரகாஷிடம் பேசினோம். "அனைத்துக் கட்சியினர் மற்றும் விவசாயிகள் கூட்டத்தில் இதுகுறித்து என்னிடம் புகார் தெரிவிக்கப்பட்டது. உடனடியாகக் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டப்படி போர்வெல் மூலம் தண்ணீர் எடுத்து விற்கத் தடை பிறப்பித்தேன். சில தொழிற்சாலை அதிபர்கள் உயர்நீதிமன்றம் சென்று 'ஸ்டே' வாங்கிவிட்டனர். ஆனாலும் தனி டீம் அமைத்து தண்ணீர் வியாபாரத்தைத் தடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டு இருக்கிறேன்" என்றார் சீரியஸாக. ❒


மோகன்